# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஆட்களைப் பதிவுசெய்தல்
## (திருத்தம்)

***1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் அவர்களால் 2016, மாச்சு மாதம் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***87 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

2-PL 009814 -450 (2016/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கான விரிவுப்பெயரைத் திருத்துவதுடன், இத்திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதாகும்:-*

*(அ) இலங்கைப் பிரசைகள் எல்லோரையும் பதிவுசெய்தல்; அத்துடன்*

*(ஆ) அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட தகவுடைய பிரசைகளுக்குத் தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் "ஆட்களைப் பதிவுசெய்தல் ஆணையாளர்," "ஆட்களின் இடாப்பு", "அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற்படத்தின் மூன்று பிரதிகள் அல்லது ஒரு நிழற்படம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "ஆட்களை பதிவுசெய்தல் ஆணையாளர் தலைமையதிபதி", "ஆட்களின் தேசிய இடாப்பு", "தேசிய அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற்படங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பொதுவான திருத்தத்துக்கு ஏற்பாடுசெய்கின்றது.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய I அ ஆம் பாகத்தை உட்புகுத்துகின்றது.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒவ்வோர் இலங்கைப் பிரசையும் கட்டாயமாகப் பதிவுசெய்யப்படுவதற்கும், தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான புதிய வயதெல்லையை அறிமுகப்படுத்துவதற்கும் ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தின் தலைப்பைத் திருத்துகின்றது.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மேலதிக ஆணையாளர் தலைமையதிபதியையும் மற்றும் ஆணையாளர்களையும் நியமிப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் அது 3 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் தத்துவங்கள் கையளிக்கப்படுவதற்கு ஏற்பாடுசெய்தலும் மற்றும் ஆட்களைப் புதிவுசெய்தல் திணைக்களத்தின் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலான அலுவலகங்களைத் தாபித்தலும் ஆகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஆட்களின் தேசிய இடாப்பு என அழைக்கப்படும் தரவுத்தளமொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 11 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனாவது அத்தகைய ஆள் தொடர்பிலான ஆட்களின் தேசிய பதிவகத்தில் பதியப்பட்டுள்ள தகவல் மாற்றத்தை ஆணையாளருக்கு அறிவிப்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு ஏற்பாடு செய்வதாகும்.*

***வாசகம் 12 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பங்களைச் செய்யும் முறையை எடுத்துக்காட்டுவதாகும்.*

***வாசகம் 13 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், இது முதன்மைச் சட்டவாக்கத்துக்கான விளைவாந்தன்மையினதுமான திருத்தமாகும்.*

***வாசகம் 14*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனாவது விண்ணப்பங்களை அகற்றும் முறையை விதித்துரைப்பதாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒரு தேசிய அடையாள அட்டையில் பிரதிபலிக்கப்பட்ட தகவலைக் குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய அடையாள அட்டை தொலைந்துபோனமை பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அதனை வைத்திருப்பவர் அறிவிப்பதனைத் தேவைப்படுத்துவதாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி தொலைந்துபோகும் விடயத்தில் அதன் இணைப்பிரதியைப் பெறுவதற்குப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி சேதமடையும் விடயத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தொலைந்துபோன தேசிய அடையாள அட்டை மீட்டுப்பெறப்படும் விடயத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழியும் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவரொருவர் அத்தகைய தேசிய அடையாள அட்டையை ஆணையாளர் தலைமையதிபதியிடம் உடனடியாக ஒப்படைப்பதனைத் தேவைப்படுத்துவதாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து (1அ) என்னும் புதிய உட்பிரிவை உட்புகுத்துகின்றதுடன், இப்புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் சட்டப்பயனானது, தேசிய அடையாள அட்டைகளைச் சட்டவிரோதமாக உடைமையில் வைத்திருப்பதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான தண்டங்களை ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 22*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், 3 ஆம் வாசகம் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையு டையதுமாகும்.

***வாசகம் 23*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவை மாற்றீடு செய்வதுடன், இச்சட்டத்துக்குப் பொதுவாகச் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

***வாசகம் 24*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவைத் திருத்துவதுடன், இச்சட்டத்துக்குப் பொதுவாகச் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.

***வாசகம் 25*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 39அ தொடக்கம் 39ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப் பயனானது பின்வருவனவற்றை ஏற்பாடு செய்கின்றது.

(i) குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு தகவலை சமர்ப்பிப்பதற்கான விதித்துரைக்கப்பட்ட அதிகாரம் ;

(ii) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவதற்கும் குறித்த சில சூழ்நிலைகளில் ஆணையாளர் தலைமையதிபதியின் வேண்டுகோளின் மீது தகவலை கொடுத்துதவுவதற்கும் ;

(iii) ஆணையாளர் தலைமையதிபதி குறித்த சில சூழ்நிலைகளில் தகவலை வெளிப்படுத்துவதற்கும்;

(iv) குறித்த சில சூழ்நிலைகளில் பதிவு செய்வதிலிருந்தான விலக்களிப்புகள் ;

(v) ஆட்களின் தேசிய இடாப்புக்கு அதிகாரமளிக்கப்படாத அணுகுமுறையை தடைசெய்தல்;

(vi) உத்தியோகபூர்வ இரகசியத்தைப் பேணுதல்.

***வாசகம் 26*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் இச்சட்டத்துக்குப் பொதுவாக செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையுடையதாகும்.*

***வாசகம் 27*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றதுடன், இச்சட்டத்துக்குப் பொதுவாகச் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.*

***வாசகம் 28*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவை திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப் பயனாவது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் மீறுகைக்கான தவறுகளுக்கும் தண்டங்களுக்கும் ஏற்பாடுசெய்கின்றது.*

***வாசகம் 29*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், அது 5 ஆம் வாசகத்தின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடையதுமான திருத்தமொன்றாகும்.*

***வாசகம் 30*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 12 ஆம், 14 ஆம் மற்றும் 25ஆம் வாசகங்களினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.*

***வாசகம் 31*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், சட்டத்துக்குப் பொதுவாகச் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு விளைவாந்தன்மையுடையதுமாகும்.*

***வாசகம் 32*** : *இவ்வாசகம் நிலைபெயர் கால ஒழுங்கேற்பாடொன்றைச் செய்கின்றதுடன் சட்டப்பயனானது, அமைச்சரால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மீளப்பதிவு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட அடையாள அட்டையொன்றை வைத்திருப்பதாகும்.*

***வாசகம் 33*** : *இவ்வாசகம் நிலை பெயர்கால ஒழுங்கேற்பாடொன்றை ஏற்பாடு செய்கின்றதுடன் சட்டப் பயனாவது குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் அடையாள அட்டையொன்றுக்கு விண்ணப்பிப்பதற்காக பொறுப்புடைமையிலிருந்து குறித்த சில ஆட்களை விலக்களிப்பு செய்கின்றது.*

***வாசகம் 34*** : *இவ்வாசகம் நிலைபெயர்கால ஏற்பாடொன்றை ஏற்பாடு செய்கின்றதுடன் சட்டப்பயனாவது அவசியமான உட்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் செய்யும்வரை விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யொன்றுக்கு அமுலில் இருப்பதற்கு முதன்மைச்சட்டவாக்கத்தின் 6, 9, 14, 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளை அனுமதிப்பதாகும்.*

*ச.வ.ஓ. 33/2013*

## 1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கான விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்"எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கான விரிவுப் பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப் பெயர் இடப்படுகின்றது:-

> "இலங்கையின் எல்லாப் பிரசைகளையும் பதிவு செய்வதற்கும்; அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தகவுடைய பிரசைகளுக்குத் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.".

*"ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர்", "ஆட்களின் இடாப்பு", "அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற்படத்தின் மூன்று பிரதிகள் அல்லது ஒரு நிழற்படம்" என்பன,"*

***3.*** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் -

(அ) "ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களும்;

(ஆ) "ஆட்களின் இடாப்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆட்களின் தேசிய இடாப்பு" என்னும் சொற்களும்;

2-PL 009814-450 (2016/03)

(இ) "அடையாள அட்டைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தேசிய அடையாள அட்டைகள்" என்னும் சொற்களும்; அத்துடன்

ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் தலைமை யதிபதி", "ஆட்களின் தேசிய இடாப்பு", "தேசிய அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற் படங்கள்" என அறியப்படுதல் வேண்டும்.

(ஈ) "நிழற்படத்தின் மூன்று பிரதிகள் அல்லது ஒரு நிழற் படம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிழற் படங்கள்" என்னும் சொல்லும்,

இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் உள்ள "ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர்", "ஆட்களின் இடாப்பு", "அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற்படத்தின் மூன்று பிரதிகள் அல்லது ஒரு நிழற்படம்" என்பன பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், முறையே "ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி", "ஆட்களின் தேசிய இடாப்பு", "தேசிய அடையாள அட்டைகள்" மற்றும் "நிழற்படங்கள்"என்பன பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தில் 3,4, 5, 6, 9, 10, 11, 12, 13, 14,15, 16, 17, 18, 19, 20, 21, 23, 24, 26, 33, 36அ, 37, 38, 39, 40, 41, 42, 43, 47, 51 மற்றும் 55 என்னும் பிரிவுகளில் உள்ள "ஆணையாளர்" பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், "ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி" என்பதற் கான குறிப்பீடொன்றாக வாசித்தும் பொருளமைத்தும் கொள்ளப் படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 1அ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 1ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பாகம் 1அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் Iஅ

**முதனிலையானவை**"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"பதிவு செய்யப் படுவதற் காளாகவுள்ள ஆள்.*

2. (1) இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து இலங்கைப் பிரசையொருவராகவுள்ள மற்றும் பதினைந்து வயதை அடைந்துள்ளவரும் அல்லது அடைகின்றவருமான ஆள் ஒவ்வொருவரும் இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்படுவதற்கு ஆளானவரான ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் அத்தகைய பதிவிற்கு-

(அ) 6 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக; அத்துடன்

(ஆ) தேசிய அடையாள அட்டையொன்றை வழங்குவதற்காக,

விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் விண்ணப்பித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இனைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் Iஆனது அதன், "பாகம் I" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"பாகம் Iஆ"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு, (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(அஅ) ஆட்களைப் பதிவு செய்வதற்கான மேலதிக ஆணையாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குப் பெயரினாலான அல்லது பதவியினாலான ஆளொருவர்;

(அஅஅ) ஆணையாளரொருவராக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குப் பெயரினாலான அல்லது பதவியினாலான ஆளொருவர், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்;”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(ஆ) மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனும் ஆணையாளர், எவரேனும் பிரதி ஆணையாளர், எவரேனும் உதவி ஆணையாளர், எவரேனும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மற்றும் எவரேனும் பதிவுசெய்யும் அலுவலர், ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

“(1) ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது

சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக் கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும்படி, புரியும்படி அல்லது நிறைவேற்றும்படி மேலதிக ஆணையாளர் தலைமை யதிபதிக்கு, எவரேனும் ஆணையாளருக்கு, எவரே னும் பிரதி ஆணையாளருக்கு, எவரேனும் உதவி ஆணையாளருக்கு, எவரேனும் மாவட்டச் செயலாள ருக்கு, எவரேனும் பிரதேசச் செயலாளருக்கு அல்லது ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு ஒன்றில் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ அதிகாரமளிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், 51ஆம் பிரிவினால் ஆணையாளர்மீது அளிக்கப்பட்ட தவறுகளை இணக்குவதற்கான தத்துவத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.";

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "எவரேனும் அரசாங்க அதிபர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் மாவட்டச் செயலாளர் அல்லது எவரே னும் பிரதேசச் செயலாளர்" என்னும் சொற்களை இடு வதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(3) ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்திற் கேற்ப, மாகாண மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் அல்லது பிரதேச மட்டத்தில் ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தின் அலுவலகமொன்றைத் தாபிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலகத் திற்குப் பொறுப்பாகவிருப்பதற்கென அலுவலரொரு வரையும் நியமிக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, (3)ஆம் உட் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு, இச்சட்டத்தின்கீழ்

ஆட்களைப் பதிவுசெய்து தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட, அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும்படி, புரியும்படி அல்லது நிறைவேற்றும்படி அதிகாரமளிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு,இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:-

"ஆட்களின் தேசிய இடாப்பு.

6. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் "ஆட்களின் தேசிய இடாப்பு" எனவழைக்கப்படவேண்டிய தரவுத்தளமொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்; அதில் இலங்கையின் ஒவ்வொரு பிரசையும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆள் தொடர்பிலான பின்வரும் தகவல் பதிவு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) பெயர்;

(ஆ) பிறந்த திகதி;

(இ) பிறந்த இடம்;

(ஈ) பால்;

(உ) முகவரி;

(ஊ) குடும்ப விபரங்கள் ; அத்துடன்

(எ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் தகவல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பிரிவு 6அ வினை உட்புகுத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை உடனடுத்து அதன் 6அ என்னும் பிரிவாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கம் இத்தாற் திருத்தப்படுகின்றது:-

*"தகவலிலான மாற்றத்தை ஆணையாளர் தலைமை யதிபதிக்கு அறிவிப்ப தற்கான கடமை.*

6அ. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், ஆட்களின் தேசிய இடாப்பை நாளது வரையாக்கும் நோக்கத்திற்காக விதித்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆட்களின் தேசிய இடாப்பில் பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஆள் தொடர்பான தகவல்கள் சம்பந்தமாக சூழ்நிலையிலான ஏதேனும் மாற்றத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "ஆணையாளர் அல்லது அரசாங்க அதிபர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் -

(அ) (ஆஆ) (i) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(i) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் நிர்ணயிப்பதற்கு அமைச்சர் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற அத்தகைய பதிவுக்கான கட்டணம் தொடர்பில் விட்டுக்கொடுப்புச் சான்றிதழெதுவும் இச்சட்டத்தின்கீழ் விண்ணப்பகாரருக்கு

வழங்கப்பட்டிராவிடின், அத்தகைய கட்டணக் கொடுப்பனவுக்கான எண்பிப்புடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு முறையினூடாக அத்தகைய கொடுப்பனவை நிலைநாட்டுதல் வேண்டும்; அல்லது ";

(ஆ) (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(இ) கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன்";

(3) அதன் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(3) பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(அ) (i) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் எடுக்கப்பட்ட விண்ணப்பகாரரின் விதித்துரைக்கப்பட்ட உயிரி அளவைகள்;

(ii) விதித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள், அளவுக் குறிப்பீடுகள், நியமங்கள் மற்றும் தரம் என்பனவற்றைக் கொண்ட விண்ணப்பகாரரின் நிழற்படங்கள்; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் எடுக்கப்பட்ட விண்ணப்பகாரரின் உருவச்சாயல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***13***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***14***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அதன் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> "(4) ஆணையாளர் தலைமையதிபதி விண்ணப்பகாரருக்குத் தேசிய அடையாள அட்டையொன்றை வழங்கிய பின்னர் விண்ணப்பத்தை விண்ணப்பகாரருக்குத் திருப்பிக் கொடுப்பதனைச் செய்வித்தல் வேண்டும் அல்லது விண்ணப்பத்தை விதித்துரைக்கப்பட்ட முறையில் அழித்துவிடச் செய்வித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***15***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுதல்.*

14. ஆணையாளர் தலைமையதிபதி, செயல்முறைக்குகந்தவரை விரைவாக, அவ்வாளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராக வந்ததன் பின்னர் தேசிய அடையாள அட்டையொன்றை வழங்குதல் வேண்டும். அத்தகைய அட்டையானது—

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தலும் விதித்துரைக்கப்பட்ட விபரங்களையும் விதித்துரைக்கப்பட்ட செல்லுபடியாகும் காலப்பகுதியையும் கொண்டிருத்தலும் வேண்டும்;

(ஆ) நிழற்படங்களை அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் எடுக்கப்பட்ட உருவச்சாயலைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) ஆணையாளர் தலைமையதிபதியின் கையொப்பத்தை அல்லது அவரின் அச்சுக் கையொப்பம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“தேவைப்பட்ட போது தேசிய அடையாள அட்டை காண்பிக்கப் படுதல் வேண்டும்.

15. (1) தேசிய அடையாள அட்டையொன்றை வைத்திருப்பவர், ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது வேறெவரேனும் விதித்துரைக்கப்பட்ட அலுவலரின் கோரிக்கையின்மேல், அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் அவ்வட்டையைக் காண்பித்தல் வேண்டுமென்பதுடன், அதனைச் சோதனையிடுவதற்கு அனுமதித்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சார்த்தப்பட்ட மீறுகை ஏற்பட்ட நேரத்தில் ஆளெவரினதும் தேசிய அடையாள அட்டை தொலைந்திருப்பின், அத்துடன் அத்தகைய தொலைந்துபோனமை பற்றி மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தில் அறிக்கையிடுதலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அப்பொருள்பட எழுத்தில் வெளிப்படுத்துகையொன்றைச் சமர்ப்பித்தலும் தேசிய அடையாள அட்டையின் இணைப்பிரதியை வழங்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்தலும் தொடர்பாக 16ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அவர் இணங்கியொழுகியிருப்பின், அவர் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளை மீறியுள்ளாரெனக் கருதப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியமை காரணமாக இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக்கெதிரான ஏதேனும் குற்ற

வழக்கில், அத்தகைய ஆள் ஒரு தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவராகவுள்ளார் என்ற பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியினால், மேலதிக ஆணையாளர் தலைமையதிபதியினால், ஆணையாளரொருவரினால், பிரதி ஆணையாளரொருவரினால், உதவி ஆணையாளரொருவரினால், அல்லது உதவிக் கண்காணிப்பாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவரினால் அல்லது காலத்துக்குக்காலம் அமைச்சரினால் வர்த்தமானியில் அத்தகைய நோக்கத்துக்காக அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எவரேனும் பகிரங்க அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று காண்பிக்கப்படின், அத்தகைய ஆளினால் முரணாக எண்பிக்கப்படும் வரை, அத்தகைய ஆள் அத்தகைய அட்டையை வைத்திருப்பவரென ஊகிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) தமது தேசிய அடையாள அட்டையைத் தொலைத்துள்ள எவரேனுமாள் அத்தகைய தொலைத்தமை பற்றி மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விளைவைக் கொண்ட வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தலும் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் உடனும் அவ்வடையாள அட்டையின் இணைப் பிரதிக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தலும் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (ஆ) (i) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(i) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் நிர்ணயிப்பதற்கு அமைச்சர் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற அத்தகைய இணைப்பிரதிக்கான கட்டணம் தொடர்பில் விட்டுக்கொடுப்புச் சான்றிதழெதுவும் இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பகாரருக்கு வழங்கப்பட்டிராவிடின், அத்தகைய கட்டணம் கொடுப்பனவுக்கான எண்பிப்புடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு முறையினூடாக அத்தகைய கொடுப்பனவை நிலைநாட்டுதல் வேண்டும்; அல்லது";

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(இ) கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன்";

(இ) அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஈ) (i) அத்தகைய அட்டையின் மூலப்பிரதி தொலைந்துபோனமை பற்றி எந்தப் பொலிசு நிலையத்துக்கு விண்ணப்பகாரரினால் அறிக்கையிடப்பட்டதோ அந்தப் பொலிசு நிலையத்தின் தகவல் புத்தகத்தின் இயைபான பிரித்தெடுத்த பகுதியின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(ii) ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் எடுக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட உயிரி அளவைகள் ;

(iii) விதித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள், அளவுக் குறிப்பீடுகள், நியமங்கள் மற்றும் தரம் என்பனவற்றைக் கொண்ட விண்ணப்பகாரரின் நிழற்படங்கள்; அத்துடன்

(iv) ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் எடுக்கப்பட்ட விண்ணப்பகாரரின் உருவச் சாயல்,

என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) தேசிய அடையாள அட்டையொன்று சேதப்படுத்தப்படுமிடத்து, உருக்குலையுமிடத்து அல்லது வாசிக்க முடியாததாகவிருக்குமிடத்து அல்லது வாசிக்க முடியாததாக வருகின்ற ஆபத்துள்ளவிடத்து அல்லது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்ற தகவல் மாறியுள்ளவிடத்து, அல்லது வைத்திருப்பவரின் அபிப்பிராயத்தில் பிழையான எத்தகவலை அது கொண்டுள்ளதென அவர் அறிந்துள்ளாரோ அந்தப் பிழையான தகவலை அது கொண்டுள்ளவிடத்து, அவ்வட்டையை வைத்திருப்பவர், உடனடியாக –

(அ) அந்நிகழ்வை எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வட்டையின் இணைப்பிரதியொன்றுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அஅ) (i) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(i)அத்தகைய அட்டையின் இணைப்பிரதியொன்று வழங்குவதற்கான கட்டணம் தொடர்பில் விட்டுக் கொடுப்புச் சான்றிதழ் எதுவும் இச்சட்டத்தின்கீழ் விண்ணப்பகாரருக்கு வழங்கப்பட்டிராவிடின், அத்தகைய கட்டணக் கொடுப்பனவிற்கான எண்பிப்புடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு முறையினூடாக அத்தகைய கொடுப்பனவை நிலைநாட்டுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் :-

"(ஆ) கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; அத்துடன்";

(இ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(இ) பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:-

(i) ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் எடுக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட உயிரி அளவைகள்;

(ii) விதித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள், அளவுக் குறிப்பீடுகள், நியமங்கள் மற்றும் தரம் என்பனவற்றைக் கொண்ட விண்ணப்பகாரரின் நிழற்படங்கள்;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் எடுக்கப்பட்ட விண்ணப்பகாரரின் உருவச்சாயல்; அத்துடன்

(iv) அவ்வட்டையின் மூலப்பிரதி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, அதன் (1)(அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) பதினாறாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மீட்டெடுத்தலுக்கு முன்னர் அத்தகைய ஆளினால் இணங்கியொழுகப்பட்டிருப்பின், அத்தகைய மீட்டெடுப்புப் பற்றிய நிகழ்வை, அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்; அத்துடன்.".

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கைப் பிரசையாக இல்லா தொழிகின்ற எவரேனுமாள், அத்தகைய நிகழ்வு பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் அல்லது விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான வெளிப்படுத்துகையுடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு தேசிய அடையாள அட்டையை ஒப்படைத்தலும் அல்லது ஒப்படைக்கச் செய்வித்தலும் வேண்டும்.".

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்து அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுற வேண்டிய, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) ஆளெவரும், வேறெவரேனும் உயிரோடிருக்கும் ஆளுக்கு அல்லது எவரேனும் இறந்த ஆளுக்குச் சொந்தமான தேசிய அடையாள அட்டையொன்றைத் தனதுடைமையில் வைத்திருத்தலோ, பயன்படுத்துதலோ அல்லது துஷ்பிரயோகம் செய்தலோ ஆகாது.";

(2) மூன்றாம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) உட்பிரிவுகள் (1), (1அ) மற்றும் (2) என்பனவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது

ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(2) இச்சட்டத்தின் கீழ் ஒரு நியாயசபைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான அதன் முடிபு பற்றிய அறிவித்தல் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினூடாக மேன்முறையீட்டாளருக்கும் சேர்ப்பிக்கப்படுவதனை நியாயசபை செய்வித்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“கட்டணங்களை விட்டுக் கொடுத்தல்.

36அ. ஆணையாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் மாவட்டச் செயலாளர் அல்லது எவரேனும் பிரதேசச் செயலாளர் -

(அ) எவரேனுமாளின் வறுமை என்ற ஏதுவின் மீது தேசிய அடையாள அட்டையைப் பதிவு செய்வதற்காக அல்லது அதன் இணைப்பிரதியொன்றை வழங்குவதற்காக அவ்வாளினாற் செலுத்தப்படற்பாலதான கட்டணத்தை விட்டுக் கொடுக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டணம் அவ்வாறு விட்டுக் கொடுக்கப்படின், அத்தகைய கட்டணம் தொடர்பில் விட்டுக்கொடுப்புச் சான்றிதழொன்றை அவ்வாளுக்கு வழங்குதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவை திருத்துதல்.

**24**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) ஓராம் உட்பிரிவினதும் 38ஆம் மற்றும் 39ஆம் பிரிவுகளினதும் நோக்கங்களுக்காக "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனும் ஆணையாளர், எவரேனும் பிரதி ஆணையாளர், எவரேனும் உதவி ஆணையாளர், எவரேனும் மாவட்டச் செயலாளர் அல்லது எவரேனும் பிரதேசச் செயலாளர் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ, 39ஆ, 39இ, 39ஈ, 39உ மற்றும் 39 ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**25**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் அச்சட்டவாக்கம் இத்தாற்றிருத்தப்படுவதுடன், அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ, 39ஆ, 39இ,39ஈ, 39உ மற்றும் 39ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விதித்துரைக் கப்பட்ட அதிகாரசபை யொன்றிடமிருந்து தகவலைத் தேவைப்படுத்துவதற்கு ஆணையாளர் தலைமை யதிபதியின் அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவல ரொருவரின் தத்துவம்.

39அ. (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அத்தகைய அதிகாரசபையுடன் பதியப்பட்ட ஆளொருவர் தொடர்பான அத்தகைய விதித்துரைக்கப்பட்ட தகவலை எழுத்தில் கொடுத்துதவும்படி, விதித்துரைக்கப்பட்ட அதிகாரசபையொன்றைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய அதிகாரசபைக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட தகவல் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*ஆணையாளர் தலைமையதிபதி அல்லது விதித் துரைக்கப்பட்ட அலுவலரொருவர் அத்தாட்சிப்படுத் தப்பட்ட பிரதி களை வழங்குதல் மற்றும் கோரிக் கையின் மீது தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.*

39ஆ. ஆணையாளர் தலைமையதிபதி அல்லது விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவர், விதித் துரைக்கப்பட்ட முறையில்–

(அ) ஆளொருவருக்கு, அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின் மீதும் மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப் பனவின்மீதும் அவ்வாளின் தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி யொன்றை வழங்கலாம்; அல்லது

(ஆ) ஒரு பகிரங்க அலுவலர் தமது அலுவலக முறையிலான கடமைகளை நிறைவேற்றுவதில் அவரால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கை யின் மீது அல்லது இச்சட்டத்தின் 39இ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக ஆளொருவரின் தேசிய அடையாள அட்டையொன்றிலுள்ள விபரங்களின் மெய்யாந்தன்மையை அத்தாட்சிப் படுத்தலாம்; அல்லது

(இ) ஒரு தேசிய அடையாள அட்டையொன்றை வைத்திருப்பவரின் சம்மதத்துடன் விதித்துரைக்கப் பட்ட அதிகாரசபையால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின் மீது அத்தகைய அட்டையை வைத்திருப்பவர் தொடர்பிலான விபரங்களின் மெய்யாந்தன்மையை அத்தாட்சிப்படுத்தலாம்.

*தேசிய பாதுகாப்பு, குற்றச்செயல் களைத் தடுத்தல் முதலியன*

39இ. இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஆட்களின் தேசிய இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் ஏதேனும் தகவலை ஒரு பகிரங்க அலுவலருக்கு

தொடர்பான கருமங்களின்மீது ஆணையாளர் தலைமையதிபதி தகவலை வெளிவிடுதல் வேண்டும்.

அல்லது அதிகாரிக்கு வெளிவிடுதலானது அத்தகைய தகவலை வெளிவிடுதல் பின்வருமாறு அவசியமாகவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) தேசிய பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட பணிப்பொன்றின் மீது, தேசிய பாதுகாப்பின் நலன்களுக்காக; அல்லது

(ஆ) குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக அல்லது கண்டுபிடிப்பதற்காக; அல்லது

(இ) ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு அல்லது பணிப்புரைக்கு இணங்கியொழுகுகின்ற நோக்கத்துக்காக.

விலக்களிப்புகள்.

39ஈ. அமைச்சர், தேசிய பாதுகாப்பின் நலன் கருதி, அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக, அவசியமாகவிருக்கின்ற அளவுக்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றினதும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினதும் ஏற்புடைமையிலிருந்து எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் வகுப்பினரான ஆட்களுக்கு விலக்களிக்கும்படி ஆணையாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்தலாம்.

*ஆட்களின் தேசிய இடாப்பிற்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுகை.*

39உ. (1) ஆளெவரும், ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரமின்றி, ஆட்களின் தேசிய இடாப்பிற்கான அணுக்கத்தைப் பெறுதலாகாது அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் ஆட்களின் தேசிய இடாப்பில் பதியப்பட்டுள்ள ஏதேனும் தகவலின் பிரதிகளை அல்லது பிரித்தெடுப்புக்களை ஆக்குதலாகாது.

(2) ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் அவருடைய கடமைகளைப் புரிதலில் அவருடைய அறிவுக்கு எட்டியிருக்கக்கூடியதான ஆட்களின் தேசிய இடாப்பில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் தகவலுடன் தலையிடுதல் ஆகாது.

*உத்தியோகபூர்வ இரகசியம்.*

39ஊ. இச்சட்டத்தின் கீழான அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோராளும், அவருடைய கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் இச்சட்டத்தின் கீழான கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் அவரது அறிவுக்கு எட்டக்கூடியதான ஏதேனும் தகவல் தொடர்பில் கடுமையான இரகசியத்தை பேணுவதற்கு அவர் வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கின்ற, நிறைவேற்றுகின்ற மற்றும் புரிகின்ற நோக்கத்துக்காகவன்றி, ஏதேனும் அத்தகைய தகவலை வெளிவிடாது இருப்பதற்கு அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் அவர் வாக்குறுதியளித்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது, அப்பிரிவில் "ஆணையாளர், பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணையாளர் தலைமையதிபதி, மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி,

ஆணையாளர், பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

*"ஆணையாளர் தலைமையதிபதி முதலியவர்கள் சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

43. ஆணையாளர் தலைமையதிபதி, மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி, மாவட்டச் செயலாளர் ஒவ்வொருவரும், ஆணையாளர் ஒவ்வொருவரும், பிரதேசச் செயலாளர் ஒவ்வொருவரும், பிரதி ஆணையாளர் ஒவ்வொருவரும், உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும், பதிவு செய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஒவ்வொருவரும் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றுகின்ற வேறு அலுவலர் ஒவ்வொருவரும், 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினால் சமாதான அலுவலரொருவரின் மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக, அக்கோவையின் பொருளுக்குட்படச் சமாதான அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**28**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"தவறுகள்.*

44. (1) (அ) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகப் பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்வதற்குத் தவறுகின்றவரான;

(ஆ) அத்தகைய விண்ணப்பத்தில் அல்லது ஏதேனும் விசாரணைக்கு விடையாக ஏதேனும் பிழையான தகவலைக் கொடுக்கின்றவரான;

(இ) ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய விண்ணப் பங்களைச் செய்கின்றவரான;

(ஈ) மோசடிமூலம் தேசிய அடையாள அட்டை யொன்றைப் பெறுகின்றவரான; அல்லது

(உ) 24ஆம் மற்றும் 47ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகளை மோசடிமூலம் பெறுகின்றவரான அல்லது தனதுடைமையில் வைத்திருக்கின்றவரான அல்லது பயன்படுத்துகின்றவரான,

எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்ப ளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஒழுங்குசெய்து கொடுக்கின்றவரான அல்லது வசதிசெய்து கொடுக்கின்றவரான எவரேனுமாள், இச்சட்டத் தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகை யிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3)(அ) அவரினால் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள எவரேனுமாள் அல்லது ஆட்கள் தொடர்பான விபரத்திரட்

டொன்றைக் கொடுத்துதவும்படி 38ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்கு, அப்பிரிவினால் அவர் மீது சுமத்தப்பட்ட கடமையை நிறைவேற்றுவதற்குத் தவறுகின்றவரான; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் தொடர்பாக உண்மையற்றதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள ஏதேனும் விபரத்தைக் கொண்டுள்ள அத்தகைய ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்றவரான,

எவரேனும் தொழில்தருநர்,

(i) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், எந்த ஆள் அல்லது ஆட்கள் தொடர்பாக அவர் அத்தகைய விபரத்திரட்டைக் கொடுத்துதவாதுவிட்டாரோ, அத்தகைய ஒவ்வோர் ஆள் அல்லது ஆட்கள் தொடர்பிலும்; அத்துடன்

(ii) இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான விபரம் எந்த ஆள் அல்லது ஆட்கள் தொடர்பானதோ, அத்தகைய ஒவ்வோர் ஆள் அல்லது ஆட்கள் தொடர்பிலும்,

இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை

விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (1) முதல் (3) வரையில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் ஏற்பாடு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை, அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறு கின்றவரான அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்றவரான எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகை யிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,

(அ) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஒழுங்கு செய்வதற்கு மற்றும் வசதிப்படுத்துவதற்கு எத்தனிக்கின்றவர் அல்லது உதவியாயிருக் கின்றவர் மற்றும் உடந்தையாயிருக்கின்ற வரும்;

(ஆ) இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட தான பதிவுக்காக விண்ணப்பமொன்றைச் செய்யாதிருக்கும்படி பதிவுக்கு ஆளாக வுள்ளவரான வேறு எவரேனுமாளுக்கு

உதவுகின்றவரான மற்றும் உடந்தையாயிருக்கின்றவரான அல்லது அவரைத் தூண்டுகின்றவரான; அல்லது

(இ) இச்சட்டத்தின் கீழ் வேறு ஏதேனும் தவறைப் புரிவதற்கு உதவுகின்றவரான, உடந்தையாயிருக்கின்றவரான அல்லது வசதிப் படுத்துகின்றவரான,

எவரேனும் பகிரங்க அலுவலருட்பட்ட எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு, அதன் (2)ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 (2)ஆம் பிரிவு, அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஊஊ) இலத்திரனியல் முறையில் பதிவு செய்வதற்கான விண்ணப்பமும் மற்றும் விண்ணப்பகாரரொருவரைப் பதிவுசெய்வதற்கான செய்முறையும்;

(ஊஊஊ) தேசிய அடையாள அட்டைகளை வழங்கிய பின்னர் விண்ணப்பங்களை அகற்றுதல்;

(ளளளளளள) 39ஆ என்னும் பிரிவின் கீழ் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்.".

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "அரசாங்க அதிபர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்;

(2) "தோதான நியாயசபை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

' "மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆட்களைப் பதிவு செய்வதற்கான மேலதிக ஆணையாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்கு அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருளாகும்;';

(3) "உதவி ஆணையாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

' "உயிரி அளவைகள்" என்பது, ஆளொருவரின் கைவிரல் அடையாளத்தை உள்ளடக்குகின்றது;';

(4) "ஆணையாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:-

' "ஆணையாளர்" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணை

யாளரொருவராகவிருப்பதற்கு அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்கு அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;';

(5) "மாவட்டம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

'"மாவட்டச் செயலாளர்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, தத்துவங்களைக் கைமாற்றுதல் (பிரதேசச் செயலாளர்கள்) சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட மாவட்டச் செயலாளர் என்று பொருளாகும்;

"பிரதேசச் செயலாளர்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, தத்துவங்களைக் கைமாற்றுதல் (பிரதேசச் செயலாளர்கள்) சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையதாகும்;';

(6) "பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்தல்"என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

'"எழுத்து"என்பது கையினாலான அல்லது இலத்திரனியல் முறையிலான வடிவத்தை உள்ளடக்குகின்றது;'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அடையாள அட்டைகளை வைத்திருப்பவர்களை பதிவு செய்தல் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.*

**32.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட வலிதான அடையாள அட்டையை உடைமையில் வைத்திருக்கின்ற ஒவ்வோராளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விதித்துரைக்கப்பட்ட முறையில் ஆணையாளர் தலைமையதிபதியிடம் மீளப்பதிவு செய்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அடையாள அட்டை ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முடிவுத் தேதியன்று செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் உள்ளது எதுவும், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மீளப்பதிவு செய்யப்படுவதற்கு தவறுகின்ற எவரேனுமாளை மீளப்பதிவு செய்தலிலிருந்து தடுப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் முடிவுறும் தேதியானது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் ஏதேனும் மாவட்டம் தொடர்பில் மாற்றப்படலாம்.

*குறித்தசில ஆட்கள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்தவர்களாகக் கருதப் படலாகாது.*

**33.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பதினைந்து வயதை அடைந்திருந்து ஆனால் பதினாறு வயதை அடைந்திராதவரும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு ஆளான ஆளாகவிராதவராயிருந்தும் அத்தகைய தேதியன்று சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான அப் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு பதிவுசெய்யப்படுவதற்கு ஆளாக வருபவருமான, எவரேனும் பிரசை முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியெனக் கருதப்படுதல் ஆகாது. ஆயின் அத்தகைய ஆள், அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய பதிவு செய்தலுக்காக விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் விண்ணப்பமொன்றைச் செய்திருத்தல் வேண்டும்.

(2) இப் பிரிவில் "விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி" என்பது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள் எந்தக் காலப்பகுதியினுள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 52ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் பயனைக்கொண்டு அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்காக தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தக் காலப்பகுதி எனப் பொருளாகும்.

*உட்கட்டமைப்பு ஏற்பாடுகள் முதலியன தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.*

**34.** (1) இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6,9,14,16 மற்றும் 17 என்னும் பிரிவுகளுக்கும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6,9,14,16 மற்றும் 17ஆம் பிரிவுகளுக்கும் மற்றும் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முன்னர் வலுவிலிருக்கும் ஒவ்வொரு ஒழுங்குவிதிக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தினால் 6,9,14,16 மற்றும் 17 என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு பயனளிப்பதற்கு அவசியமான உட்கட்டமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழினுட்ப முறைகள் செய்யப்படும் வரை, இச்சட்டத்தின் கீழ்த் தொடர்ந்தும் நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 6,9,14,16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் நடைமுறைக் காலப்பகுதியை தீர்மானிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் தீர்மானிக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம்,9ஆம்,14ஆம்,16ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் நடைமுறைக் காலப்பகுதியின் முடிவுத் திகதியானது அதேபோன்ற கட்டளையொன்றின் மூலம் அமைச்சரால் காலத்துக்குக் காலம் மாற்றப்படலாம்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**35.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*